Cr.M.P.No.1642/2024
in CC.No.110/2021
PW3 – திரு.இராஜகோபால்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** நான் காவல் துறையில் 31 ஆண்டுகள் பணிபுரிந்தேன். நாங்கள் எதிரிகளுடன் சொத்து சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்ததால் பேசிக்கொள்வதில்லை.

**2.** எதிரி எனது தம்பி. அவர் கடற்படையில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளார். இருவருக்கும் பாகப்பிரிவினை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. எனது சகோதரிகள் எதிரியுடன் சேர்ந்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

**3.** 15.04.2020ம் தேதியன்று எனது மகன் எதிரியை அருவாளால் வெட்டியதாக குற்ற எண்.95/2020 பதிவு செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் CC.No.35/2021 ஆக நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

**4.** இவ்வழக்கு சம்பவம் நடக்கும்போது எனது மகன் சிறையில் இருந்தார் என்றால் சரிதான்.

**5.** எதிரி எனது மனைவியை தாக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த தேதியில் எதிரிக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் சரியல்ல.

**6.** எதிரி 15.04.2020 முதல் 18.04.2020 வரை ASSI மல்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் சரியல்ல.

**7.** 16ம் தேதியன்று எனது மனைவியை வைத்து புகார் அளித்தேன் என்றால் சரியல்ல.

**8.** எனது மனைவிக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொள்ளவில்லை. சம்பவம் காலை 08.00 மணிக்கு எனது வீட்டின் முன்பு நடந்தது. அப்போது நான் வீட்டில் இருந்தேன். சத்தம் கேட்டு வெளியே வந்தேன். என்னை அசிங்கமாக பேசினார். தாக்கவில்லை. இந்த விபரங்களை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எனது

மனைவியை மட்டும் விசாரித்தார்கள்.

**9.** எதிரியின் வீடும், எனது வீடும் அருகருகே அமைந்துள்ளது. எனது மகனை நான் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அ.சா.1 பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**10.** நான் கூறுவதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது செல்வாக்கை பயன்படுத்தி எதிரியின் மீதுள்ள முன்பகையை மனதில் வைத்து எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக அ.சா.1 அளித்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)